1967 நவம்பர் 25]

சோவியத் விவசாய விஞ்ஞானிகள் குழு

* 437 **வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்**: மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967 மார்ச்சு மாதத்தில் சோவியத் ரஷ்ய அரசாங்கத்தின் வேளாண்மைத் துறை துணை மந்திரி திரு. ஓரோபி தலைமையில் சோவியத் விவசாய விஞ்ஞானிகளின் குழு தமிழகத்துக்கு வந்தார்களா ?

(இ) ஆம் எனில், அவர்கள் எங்கெங்கே பார்வையிட்டார்கள் ? அவர்களின் கருத்தென்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) ஆம்.

(இ) நெல் பெருக்கும் நிலையம், பழத்தோட்டம், மத்தியப் பொருட்காட்சி, கோயம்பத்தூர் வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்திலுள்ள, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் வட்டார நிலையம், கரும்பு வளர்ப்பு நிலையம், காடுகள் வளர்ச்சரகர், தென்னகக் கல்லூரி, கோயம்பத்தூர், பழஆராய்ச்சி நிலையம், பள்ளியாறு, சிம்ஸ் பூங்கா, கூனூர் உதக மண்டலத்திலுள்ள தாவரயியல் தோட்டம் ஆகிய இடங்களை அவர்கள் பார்வையிட்டனர். இம்மாநிலத்தின் வேளாண்மை நிலைமைகளைப் பற்றியும் வேளாண்மை ஆராய்ச்சி பற்றியும் நேரடியான தகவல்களை அறிவதில் அவர்கள் ஆர்வம் காட்டினர். பொருட்காட்சியைக் குறித்தும் காட்சிப் பொருள்கள் கவர்ச்சியான முறையிலும் அறிவூட்டும் வகையிலும் அமைக்கப்பட்டிருந்ததைக் கண்டு தாங்கள் அக மகிழ்ந்தது குறித்து பொருட்காட்சிப் பார்வையாளர் புத்தகத்தில் அவர்கள் எழுதி வைத்துள்ளனர்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த நிபுணர்கள் இங்கே வந்து பார்வையிட்டு, தமிழகத்திலே விவசாய அபிவிருத்திக்காக வேண்டியும், பழத்தோட்ட அபிவிருத்திக்காக வேண்டியும் என்னென்ன உதவிகள் தருவதாகக் கூறியிருக்கிறார்கள் ? அதே நேரத்தில், அவர்களுடைய நாட்டுக்கு நம் நாட்டுப் பழங்களை ஏற்றுமதி செய்ய எந்தவிதமான ஏற்பாடுகளாவது செய்யப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: வேளாண்மை அபிவிருத்தி தமிழகத்தில் எந்தமுறையில் நடைபெறுகிறது, ஆராய்ச்சி எந்தமுறையில் நடைபெறுகிறது என்பதைக் கண்டும், காட்சிப் பொருளைப் பார்த்தும் சோவியத் விஞ்ஞானிகள் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் குறிப்பு எழுதியிருக்கிறார்களே யொழிய, மற்றப்படி, கனம் உறுப்பினர் கூறுகிறபடி எந்தக் கருத்தும் கூறவில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, சோவியத் விவசாய விஞ்ஞானிகள் தமிழகத்திற்கு வந்ததைப்போல, இங்கு

இருக்கக் கூடிய விவசாயிகளை சோவியத் நாட்டிற்கு அனுப்ப அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது விவசாயிகளை அமெரிக்காவுக்குத்தான் அனுப்புவதாக இந்த அரசு மத்திய அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்திருக்கிறது. செலவை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள முன்வந்தால், சோவியத் ரஷ்யாவுக்கும் விவசாயிகளை அனுப்பலாம்.

Pesticides

* 438 Q.—THIRU P. MALAICHAMY : THIRU K. VINAYAKAM : THIRU S. DURAISAMY : } Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal of spraying insecticides and other medicines from the sky by the help of planes on the pest affected crops; and

(*b*) whether this experiment was tried in our State and if so, the results thereof ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) வேர்க்கடலைப் பயிரைப் பிடிக்கும் சிவப்பு கம்பளிப்பூச்சிகளை அழிப்பதற்காக விமானம் மூலம் மருந்து தெளிக்கும் வேலைகள் 1961-ம் ஆண்டிலிருந்தே நமது மாநிலத்தில் நடைபெற்று வருகின்றன. அதன் விளைவுகள் ஊக்கமளிப்பதாய் உள்ளது; பொதுமக்கள் பாராட்டுகின்றனர். நெற்பயிர்மீது விமானம் மூலம் மருந்து தெளிக்கும் வேலைகள், முதன்முறையாக திருநெல்வேலி மாவட்டத்தில் 1967 ஜனவரி, பிப்ரவரியில் 11,179 எக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப் பட்டன. இறுதி முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. கே. விநயகம் : ஆகாய விமானம் மூலம் பயிர்கள்மீது மருந்து தெளிக்கிற வேலை வடக்கேயிருக்கிற சில மாகாணங்களிலே வெற்றிகரமாக நடந்திருப்பதற்குக் காரணம் பரவலாக நிலமும், பயிர்களுக்கு நடுநடுவே செடிகள் இல்லாததுமே காரணமாகும். தமிழகத்திலே இருக்கிற சின்னச்சின்ன நிலங்களுக்கு நடுநடுவே அதிகமாக மரம், செடிகள் இருப்பதாலே இந்த ஆகாய விமானம் சுலபமாகப் பறக்க முடியாதென்று விமான ஓட்டிகள் சொன்னதாகவும், ஹெலிகாப்டர் மூலம்தான் சுலபமாக மருந்து தெளிக்க முடியும் என்று சொன்னதாகவும் கூறுகிறார்களே, அதை அரசாங்கம் பரிசீலித்து பார்த்ததா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிப்பதிலே எந்தவிதமான சங்கடமும் இருப்பதாக விமான ஓட்டிகள் தெரிவிக்கவில்லை. அந்தமாதிரியான ஆகாய விமானத்தில் ஏறி, நானே திண்டிவனம் பகுதியில் மருந்து தெளிப்பதைப் பார்த்தேன். இருபுறங்களிலும் முதலில் நீலக்